# கருவளவாக்க நிலமை வேறுபாடு மற்றும் போக்குகள்: மாநகர சபையை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**S. Rafeeka**[275]

Correspondence: rafeekasr@seu.ac.lk

**ஆய்வுச் சுருக்கம்**

சனத்தொகை மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான காரணிகளில் ஒன்றுதான் கருவளம். ஒரு பிரதேச சனத்தொகையின் கட்டமைப்பிலும் அளவிலும் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் சக்தியாக கருவளத்தினை கூறலாம். ஒரு நாட்டின் சனத்தொகை வளர்சியினை தீர்மானிப்பதிலும் சனத்தொகை தொடர்பான கொள்கைகளை வகுப்பதிலும் கருவளம் பிரதான பங்களிப்பினை செலுத்துகின்றது. கருவளவாக்க விகிதம் என்பது ஒரு பெண்ணால் பிரசவிக்கக்கூடிய குழந்தைகளின் சராசரி எண்ணிக்கை ஆகும். மனிதனது கருவளமானது ஊட்டச்சத்து, பாலியல் நடத்தை, சமுதாய மரபுகள், கலாச்சாரம், உள்உணர்வு, உட்சுரப்பியல், நேரம், பொருளாதாரம், வாழ்கை முறை மற்றும் உணர்ச்சிக் காரணிகளில் தங்கியுள்ளது. 1963 மற்றும் 1971 ம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்களிலிருந்து பெறப்பட்ட தரவுகளை பயன்படுத்தி நவம்பர் 1969 முதல் ஒக்டோபர் 1970 வரை நடாத்தப்பட்ட சமூக பொருளாதார ஆய்வு மற்றும் பதிவாளர் ஜெனரல் திணைக்களம் ஆகியவை 1960 - 1972 காலப்பகுதியில் இலங்கையின் கருவளவாக்கப் போக்குகளை ஆய்வு செய்தனர். இதன் அடிப்படையில் 1963-70 மற்றும் 1963-71 ஆண்டுகளில் பிறப்பு விகிதத்தில் சரிவு ஏற்பட்டத்தில் பெண்களின் விகிதாசாரத்தில் ஏற்பட்ட மாற்றம் மிகவும் குறிப்பிடத்தக்க காரணியாக இருந்தது என சுட்டிக்காட்டப்பட்டது. இதற்கு 1973 முதல் பெண்கள் திருமணத்தை தள்ளிப்போடுதல், கருத்தடை சாதனங்களின் பயன்பாட்டு அதிகரிப்பு போன்றன பிரதான காரணமாக கூறப்பட்டன. கல்முனை மாநகர சபையின் மொத்த சனத்தொகை 2001 ஆம் ஆண்டின்படி 94,579 ஆக காணப்பட்டது. இக்கால கட்டத்தில் 2.18 வீதமாக காணப்பட்ட சனத்தொகை வளர்ச்சி வீதம் 0.48 ஆக 2012 ஆம் ஆண்டய கணக்கீட்டின்படி மாறியுள்ளது. அதற்குப் பிரதான காரணம் பெண்களின் கல்வித்தரம் அதிகரித்தமையும், திருமணவயது சராசரியாக 25 ஆக மாறியமையுமாகும். மேலும் ஆய்வுப் பிரதேசத்தில் 72 வீதமான பெண்கள் கருத்தடை முறையினை பின்பற்றுபவர்களாகக் காணப்படுகின்றனர். எனவே தான் கருவளவாக்கத்தில் ஏற்படுகின்ற மாற்றம் பிரதேச சனத்தொகையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.

**பிரதான சொற்கள்:** கருவளவாக்கம், கருத்தடை சாதனம், பிறப்பு வீதம்

## 1. ஆய்வுப் பிரதேசம்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கல்முனை நகரப்பகுதியினை மையமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. கல்முனை மாநகரமானது கல்முனை தமிழ், கல்முனை, சாய்ந்தமருது ஆகிய பிரதேச செயலகத்தை உள்ளடக்கியுள்ளது. ஆய்வுப் பிரதேசமானது 22.0 சதுர கிலோமீற்றர் பரப்பளவினை கொண்ட நான்கு இன மக்களும் ஒன்றாக வாழ்கின்ற பிரதேசமாக அடையாளம் காணப்பட்ட போதும் முஸ்லிம்கள் பொரும்பாண்மையாக வாழும் பகுதியாக அமைந்திருக்கின்றது. இங்கு மொத்த சனத்தொகை 99,897 ஆகவும், சனத்தொகை அடர்த்தி 3383 $Km^3$ பேர் ஆகவும் காணப்படுகின்றது.

## 2. ஆய்வு நோக்கம்

- பிரதேச கருவளவாக்கத்தின் போக்கினை கண்டறிதல்.
- கருவளவாக்க மாற்றத்திற்கான காரணிகளை அடையாளப்படுத்தல்
- கருவளத்தில் எத்தகைய மாற்றங்களை ஆய்வுப்பிரதேசம் அடைந்துள்ளது என்பதனை ஆராய்தல்

[275] Department of Geography, South Eastern University of Sri Lanka.

### 3. ஆய்வு முறையியல்

காலத்தின் தேவையாகவுள்ள இவ்வாய்வினை மேற்கொள்வதற்கு தேவையான தரவுகளும் தகவல்களும் பின்வரும் வழிமுறைகளில் சேகரிக்கப்பட்டுள்ளன.

**முதலாம் நிலைத்தரவுகள்**

**1. வினாக் கொத்து**

வினாக் கொத்துக்களை ஆய்வுப் பிரதேச செயலகங்களில் காணப்படும் பெண்களின் சனத்தொகைக்கு ஏற்ப எளிய எழுமாற்று மாதிரி மூலமாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கிடையே 250 வினாக்கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அவற்றினூடாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இவ்வினாக்கொத்துக்கள் வயது ரீதியாகவும் பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளன.

**வினாக் கொத்துக்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறை:**

- நற்பிட்டிமுனை – 50
- கல்முனை – 70
- கல்முனைக்குடி – 50
- சாய்ந்தமருது - 80

**2. நேர்காணல்**

குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள்

**இரண்டாம் நிலைத் தரவுகள்**

→ சஞ்சிகைகள்
→ பத்திரிகைகள்
→ இணையத்தளங்கள்
→ வைத்திய சாலை அறிக்கைகள்

**பகுப்பாய்வு :**

வினாக்கொத்துக்கள் மூலம் சேகரிக்கப்பட்ட தரவுகள் எளிய புள்ளி விபரவியல் முறையான SPSS, Ms Excel பயன்படுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 4. முடிவுகளும் பரிந்துரைகளும்

கல்முனை மாநகரத்தின் சனத்தொகைப் போக்கினை பார்க்கும் போது பெண்களது சனத்தொகை அதிகமாகக் காணப்படுகின்றது

**அட்டவணை – 01 ஆய்வுப்பிரதேச சனத்தொகை - 2018**

| பிரதேச செயலகப் பிரிவு | மொத்த சனத்தொகை | ஆண்கள் | பெண்கள் |
|---|---|---|---|
| கல்முனை தமிழ் | 29,800 | 13,844 | 15,956 |
| கல்முனை | 44,632 | 21,583 | 23,049 |
| சாய்ந்தமருது | 25,461 | 12,229 | 13,237 |

| | | | |
|---|---|---|---|
| மொத்தம் | 99,893 | 47,656 | 52,237 |

மூலம்: கல்முனை மாநகர சபையின் வருடாந்த புள்ளிவிபர அறிக்கை – 2018

**அட்டவணை – 02 கல்முனை மாநகரசபையின் சனத்தொகை வளர்ச்சி வீதம்**

| வருடம் | மொத்த சனத்தொகை | சனத்தொகை அதிகரிப்பு | வளர்ச்சி வீதம் |
|---|---|---|---|
| 1981 | 65,803 | - | - |
| 2001 | 94,579 | 28,776 | 2.18 |
| 2012 | 99,634 | 5,055 | 0.48 |

மூலம்: குடித்தொகைப் புள்ளிவிபரவியல் திணைக்களம் - 2012

அட்டவணை 02 இன்படி ஆய்வுப்பிரதேச சனத்தொகை வளர்ச்சி வீதம் குறைந்துகொண்டே செல்லுகின்றது. அதாவது 2001 ஆம் ஆண்டு 2.18 வீதமாக காணப்பட்ட சனத்தொகை வளர்ச்சி வீதம் 2012 ஆம் ஆண்டய கணக்கீட்டின்படி 0.48 வீதமாக குறைந்துள்ளது. இதற்குப் பிரதான காரணம் பெண்களின் கல்வியறிவு வீதம் அதிகரிப்பு, புதிய கருத்தடை சாதனங்களின் பயன்பாடு அதிகரிப்பு மற்றும் திருமண வயது அதிகரித்துள்ளமையை போன்றன குடும்ப நல உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார உத்தியோகத்தர்களுடன் மேற்கொள்ளப்பட்ட நேர்முகம்காணல் மற்றும் கலந்துரையாடலில் இருந்து உறுதிப்படுத்த முடிகின்றது.

**அட்டவணை – 03 கல்முனை மாநகரசபையின் சனத்தொகை வயது அடிப்படையில்**

| வயதுப் பிரிவு | மொத்த சனத்தொகை |
|---|---|
| 0 – 9 | 14,960 |
| 10 – 19 | 13,837 |
| 20 – 29 | 11,718 |
| 30 – 39 | 10,794 |
| 40 – 49 | 9,579 |
| 50 – 59 | 7,479 |
| 60 – 69 | 4,034 |
| 70 – 79 | 1,591 |
| 80 மேல் | 443 |

மூலம்: குடித்தொகைப் புள்ளிவிபரவியல் திணைக்களம் - 2012

இதன் அடிப்படையில் கருவளவாக்க வீதம் அதிகமாகக் காணப்படும் வயதுப்பிரிவான 20 – 39 வயதுப் பிரிவினரின் சனத்தொகை 22,512 பேராகக் காணப்படுகின்றனர். இவர்களின் கல்வி நிலை, குடும்ப வருமானம் போன்ற காரணிகள் ஆய்வுப்பிரதேச பிறப்பு வீதத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

**அட்டவணை – 04 வயது அடிப்படையிலான கருவளவாக்க வீதம் (வினாக்கொத்துப் பகுப்பாய்வின் அடிப்படையில்)**

| வயதுப் பிரிவு | வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் எண்ணிக்கை | | பிள்ளைகளின் எண்ணிக்கை | கருவளவாக்க வீதம் % |
|---|---|---|---|---|
| 15 – 19 | 30 | 12% | 60 | 7.2 |
| 20 – 24 | 40 | 16% | 120 | 19.2 |
| 25 – 29 | 40 | 16% | 200 | 32 |
| 30 – 34 | 40 | 16% | 95 | 15.2 |
| 35 – 39 | 40 | 16% | 55 | 8.8 |
| 40 – 44 | 30 | 12% | 20 | 2.4 |
| 45 – 49 | 30 | 12% | 06 | 0.72 |

மூலம்: வினாக்கொத்துப் பகுப்பாய்வு

வயது அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்ட 250 வினாக்கொத்துக்களின் அடிப்படையில் 25 – 29 வயதுப் பிரிவினரிடையே கருவளவாக்க வீதம் 32 வீதமாகக் காணப்படுவதோடு 20 – 24 வயதுப் பிரிவினரிடையே 19.2 வீதமாக காணப்படுகின்றது. இந்த அட்டவணையில் உள்ள தரவுகளின் அடிப்படையில் பார்க்கும் போது பெண்ணின் வயது அதிகரிக்க அதிகரிக்க அவள் பெற்றெடுக்கும் பிள்ளைகளின் அளவில்மாற்றம் ஏற்படுகின்றது. அதாவது பெண்ணின் வயதிற்கும் கருவளவாக்கத்திற்குமிடையே நேர் எதிர் தொடர்புகள் உள்ளன.

**அட்டவணை – 05 கல்வியறிவின் அடிப்படையிலான கருவளவாக்க வீதம் (வினாக்கொத்துப் பகுப்பாய்வின் அடிப்படையில்)**

| கல்வி மட்டம் | வினாக்கொத்துப் பகுப்பாய்வின் படி பெண்களின் எண்ணிக்கை | | பெற்றெடுத்துள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை | கருவளவாக்க வீதம் % |
|---|---|---|---|---|
| பட்டம் மற்றும் அதற்கு மேல் | 20 பேர் | 8% | 25 | 2.0 |
| உயரதர சித்தி | 25 பேர் | 10% | 61 | 6.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| சாதாரணதர சித்தி | 45 பேர் | 18% | 95 | 17.1 |
| தரம் 6 - 10 | 70 பேர் | 28% | 115 | 26.6 |
| தரம் 1 - 5 | 50 பேர் | 20% | 120 | 24.0 |
| பாடசாலை கல்வி பெறாதவர்கள் | 40 பேர் | 16% | 140 | 22.4 |

மூலம்: வினாக்கொத்துப் பகுப்பாய்வு

சேகரிக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் தரம் 6 – 10 வரை கல்வி கற்ற பெண்களிடையே கருவளவாக்கம் 26.6 மூ மாகக் காணப்படுகின்றது. அதேபோல் தரம் 1 – 5 வரை கல்வி கற்ற பெண்களிடையே 24 வீதமாகக் காணப்படும் அதேவேளை பட்டப்படிப்பினைப் பெற்றவர்களிடையே பிறப்பு வீதம் 2 வீதமாகக் காணப்படுகின்றது. இது ஒப்பீட்டளவில் பாரிய வீழ்ச்சியாகும். இதற்குபிரதான காரணம் பட்டப்படிப்பினை முடித்த பெண்களில் 90 வீமதானவர்கள் வேலைக்குச் சென்றுகொண்டிருப்பதனால் அதிக குழந்தைகளை பெற்றுப் பராமரிப்பதில் காணப்படும் சிக்கல்களினால் 1 அல்லது 2 பிள்ளைகள் மட்டும் போதும் என்ற மனநிலையில் காணப்படுகின்றனர். கல்வியறிவு குறைந்தவர்களிடையே பிறப்பு வீதம் அதிகமாகவும் கல்வியறிவு கூடியவர்களிடையே பிறப்பு வீதம் குறைவாகவும் காணப்படுகின்றது. எனவேதான கல்வியறிவு பிரதேச கருவளவாக்கத்தில் தாக்கத்தை ஏற்படுத்தும் பிரதான காரணிகளில் ஒன்றாக நோக்கப்படுகின்றது.

**அட்டவணை – 06 கருத்தடை முறையினைப் பயன்படுத்தல்**

| | | | | |
|---|---|---|---|---|
| கருத்தடை முறையினைப் பயன்படுத்துபவரா? | ஆம் | 180 பேர் | இல்லை | 70 பேர் |
| | | 72% | | 28% |

| 180 பேரில் | எண்ணிக்கை | வீதம் % |
|---|---|---|
| சுய கட்டுப்பாடு/ இயற்கை முறை | 20 | 11.11 |
| வாய்வழி கருத்தடை மாத்திரை | 40 | 22.22 |
| ஆணுறை | 35 | 19.44 |
| ஊசி ஏற்றல் | 32 | 17.77 |
| நவீன கருத்தடை முறை(லூப், குச்சி) | 48 | 26.66 |
| நிரந்தர கருத்தடை | 05 | 2.77 |

மூலம்: வினாக்கொத்துப் பகுப்பாய்வு

**ஆய்வுப்பிரதேச கருவளவாக்கத்தில் பாதிப்புச் செலுத்தும் காரணிகள்**

- திருமணவயது
- பெண்களின் கல்வியறிவு மட்டம்
- பெண்கள் தொழிலுக்குச் செல்லுதல்
- கணவன்மார் வெளிநாடுகளின் தொழில் புரிதல்
- கருத்தடை சாதனங்களின் பயன்பாடு
- குடும்பநல பரிசோதகர் மூலமாக இலவசமாக கருத்தடை சாதனங்களை பெற்றுக் கொள்ளல்
- பெண்களில் சமூகப் பொருளாதார தரம் உயர்வடைந்தமை
- சுகாதாரத்துறையில் ஏற்படட்ட விருத்தி

## 5. முடிவுரை

வினாக்கொத்துத் தரவுப்பகுப்பாய்வு மற்றும் கலந்துடையாடல் மூலமாகவும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் அறிக்கைகளுக்கும் புள்ளி விபரங்களுக்கும் ஏற்ப ஆய்வுப்பிரதேச சனத்தொகைப் வளர்சிப் போக்கு குறைவடைந்து செல்லுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதற்குப் பிரதான காரணம் பெண்களின் கருவளவாக்கத்தில் ஏற்பட்ட மாற்றமாகும். பெண்களின் கல்வியறிவு மட்டம் அதிகரிக்க அதிகரிக்க பெண்கள் பெற்றெடுக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் குறைவு ஏற்பட்டுக்கொண்டே செல்லுகின்றது. ஆய்வுப்பிரதேசப் பெண்களில் அதிகமானோரின் கணவன்மார்கள் வெளிநாடுகளில் தொழில் புரிவதும் கருத்தடை சாதனங்களின் பயன்பாடு 72 வீதமாகக் காணப்படுவதும் பிரதேச கருவளவாக்கத்தில் மாற்றத்தை ஏற்படுத்தி வருகின்றமை குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக உள்ளது.

## 6. உசாதுணை

1. Demographic and Health Survey - 2016, Sri Lanka
2. https://www.cia.gov/library/publications/the-world-factbook/
3. http://www.statistics.gov.lk/social/DHS_2016a/Chapter4.pdf
4. http://www.statistics.gov.lk/DataSheet/2019DataSheet_Ta.pdf
5. http://www.statistics.gov.lk/statistical%20Hbook/2018/Ampara/Chapter%202.pdf